Government of Western Australia
North Metropolitan Health Service

BreastScreen WA
WA's only accredited screening service

# எனக்கு 75 வயது ஆன பிறகு... மார்பகப் புற்றுநோய்ச் சோதனைகளை நான் நிறுத்திவிடலாமா அல்லது தொடர்ந்து மேற்கொள்ள வேண்டுமா?

## சோதனைகளை நிறுத்திவிடலாமா அல்லது தொடர்ந்து மேற்கொள்ளவேண்டுமா என்பதை முடிவு செய்வதில் உங்களுக்கு உதவுவதற்கான சில தகவல்கள் இதோ.

- மார்பகப் புற்று நோய்ச் சோதனைகளைத் தொடர்ந்து மேற்கொள்வதால் 50 – 74 வயதிற்கு இடைப்பட்ட பெண்களுக்கு ஒட்டுமொத்தப் பலன்கள் இருப்பதற்கான ஆதாரங்கள் உள்ளன. *('உலக சுகாதார அமைப்பு' - World Health Organisation)*

- உங்களுக்கு 75 வயது ஆன பிறகு, மார்பகப் புற்று நோய்ச் சோதனைக்கு வருமாறு நினைவூட்டும் கடிதம் இனியும் உங்களுக்கு அனுப்பப்பட மாட்டாது.

- பொதுமக்களுக்கான மார்பகப்புற்று நோய்ச் சோதனைத் திட்டத்தில் பங்கேற்கும் 75 வயதிற்கு மேற்பட்டப் பெண்களுக்குக் கிடைக்கும் உடல் நலப் பலன்கள் ஆபத்துகளை விட அதிகம் என்பதற்கான விஞ்ஞானபூர்வ ஆதாரம் இல்லை.

- மார்பகப் புற்று நோய்ச் சோதனைகளைத் தொடர்ந்து மேற்கொள்வதால் கிடைக்கும் பலன்களைப் பற்றி உங்களுடைய ஜி.பி-யுடன் கலந்துரையாடுவதற்காக அவரைப் பார்க்குமாறு நாங்கள் பரிந்துரைக்கிறோம்.

- வயது கூடக் கூட மார்பகப் புற்றுநோய் ஏற்படுவதற்கான ஆபத்து அதிகரிக்கும் என்பதால், கட்டிகள், காம்பில் இருந்து கசிவு, தோலில் ஏற்படும் மாற்றங்கள், அல்லது இடைவிடாதப் புது மார்பக வலி ஆகிய அசாதாரணமான மாற்றங்கள் எதையும் நீங்கள் உங்கள் மார்பகத்தில் அவதானித்தால், உடனே உங்களுடைய ஜி.பி-யைப் பாருங்கள்.

**மேலதிகத் தகவல்களுக்குத் தயவு செய்து 13 20 50 - ஐ அழையுங்கள்.**

**'ப்ரெஸ்ட்ஸ்க்ரீன் WA' (BreastScreen WA)**

தொலைபேசி: 13 20 50

மின்னஞ்சல்: breastscreenwa@health.wa.gov.au

'தேசியத் தொடர் - மாற்று இணைப்பு சேவை'

(National Relay Service) www.relayservice.gov.au

'மொழிபெயர்ப்பு மற்றும் மொழிபெயர்த்துரைப்பு சேவை'

Translating and Interpreting Service (TIS) 13 14 50

BreastScreen AUSTRALIA
A joint Australian, State and Territory Government Program

LIKE US ON facebook

BEAT BREAST CANCER
HAVE A FREE X-RAY
RING : 13 20 50

MARCH 2020